# பெரியாழ்வார் திருமொழி 3-5
## அட்டுக்குவி

(கண்ணன் கோவர்த்தனகிரியை குடையாகக்கொண்டு கல்மழை தடுத்து ஆயரையும் ஆநிரையையும் பாதுகாத்தல்)

264 * அட்டுக்குவி சோற்றுப் பருப்பதமும் *
தயிர் வாவியும் நெய்யளறும் அடங்கப்
பொட்டத்துற்றி * மாரிப் பகை புணர்த்த *
பொருமா கடல்வண்ணன் பொறுத்த மலை **
வட்டத் தடங்கண் மடமான் கன்றினை *
வலைவாய்ப் பற்றிக் கொண்டு * குற மகளிர்
கொட்டைத் தலைப்பால் கொடுத்து வளர்க்கும் *
கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையே (1)

265 வழுவொன்றுமிலாச் செய்கை வானவர் கோன் *
வலிப்பட்டு முனிந்து விடுக்கப்பட்ட *
மழை வந்து எழுநாள் பெய்து மாத்தடுப்ப *
மதுசூதன் எடுத்து மறித்த மலை **
இழவு தரியாததோர் ஈற்றுப் பிடி *
இளஞ்சீயம் தொடர்ந்து முடுகுதலும் *
குழவியிடைக் காலிட்டெதிர்ந்து பொரும் *
கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையே (2)

266 அம்மைத் தடங்கண் மடவாய்ச்சியரும் *
ஆனாயரும் ஆநிரையும் அலறி *
எம்மைச் சரணேன்று கொள்ளென்றிரப்ப *
இலங்காழிக்கை எந்தை எடுத்த மலை **
தம்மைச் சரணென்ற தம் பாவையரைப் *
புனமேய்கின்ற மானினம் காண்மின் என்று *
கொம்மைப்புயக் குன்றர் சிலை குனிக்கும் *
கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையே (3)

267 கடுவாய்ச்சின வெங்கண் களிற்றினுக்குக் *
கவளமெடுத்துக் கொடுப்பானவன் போல் *
அடிவாயுறக் கையிட்டு எழப் பறித்திட்டு *
அமரர் பெருமான் கொண்டு நின்ற மலை **
கடல்வாய்ச் சென்று மேகம் கவிழ்ந்திறங்கிக் *
கதுவாய்ப்பட நீர் முகந்தேறி * எங்கும்
குடவாய்ப்பட நின்று மழை பொழியும் *

கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையே (4)

268 வானத்திலுள்ளீர் வலியீர் உள்ளீரேல் *
அறையோ வந்து வாங்குமின் என்பவன் போல் *
ஏனத்துருவாகிய ஈசன் எந்தை *
இடவனெழ வாங்கி எடுத்த மலை **
கானக் களியானை தன் கொம்பிழந்து *
கதுவாய் மதம் சோரத் தன் கை எடுத்து *
கூனல் பிறை வேண்டி அண்ணாந்து நிற்கும் *
கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையே (5)

269 செப்பாடுடைய திருமால் அவன் தன் *
செந்தாமரைக் கைவிரல் ஐந்தினையும் *
கப்பாக மடுத்து மணி நெடுந்தோள் *
காம்பாகக் கொடுத்துக் கவித்த மலை **
எப்பாடும் பரந்திழி தெள்ளருவி *
இலங்கு மணி முத்து வடம் பிறழ *
குப்பாயமென நின்று காட்சி தரும் *
கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையே (6)

270 படங்கள் பலவுமுடைப் பாம்பரையன் *
படர் பூமியைத் தாங்கிக் கிடப்பவன் போல் *
தடங்கை விரல் ஐந்தும் மலர வைத்துத் *
தாமோதரன் தாங்கு தடவரை தான் **
அடங்கச் சென்று இலங்கையை ஈடழித்த *
அனுமன் புகழ் பாடித் தம் குட்டன்களை *
குடங்கைக் கொண்டு மந்திகள் கண் வளர்த்தும் *
கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையே (7)

271 சலமா முகில் பல்கணப் போர்க்களத்துச் *
சரமாரி பொழிந்து எங்கும் பூசலிட்டு *
நலிவானுறக் கேடகம் கோப்பவன் போல் *
நாராயணன் முன் முகம் காத்த மலை **
இலைவேய் குரம்பைத் தவமா முனிவர் *
இருந்தார் நடுவே சென்று அணார் சொறிய *
கொலைவாய்ச்சின வேங்கைகள் நின்றுறங்கும் *
கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையே (8)

272 வன்பேய் முலையுண்டதோர் வாயுடையன் *

வன் தூணெனன நின்றதோர்வன்பரத்தை *
தன்பேரிட்டுக் கொண்டு தரணி தன்னில் *
தாமோதரன் தாங்கு தடவரை தான் **
முன்பே வழிகாட்ட முசுக்கணங்கள் *
முதுகில் பெய்து தம்முடைக் குட்டன்களை *
கொம்பேற்றியிருந்து குதி பயிற்றும் *
கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையே (9)

273 கொடியேறு செந்தாமரைக் கைவிரல்கள் *
கோலமும் அழிந்தில வாடிற்றில *
வடிவேறு திருவுகிர் நொந்துமில *
மணிவண்ணன் மலையுமோர் சம்பிரதம் **
முடியேறிய மாமுகிற் பல்கணங்கள் *
முன்னெற்றி நரைத்தன போல * எங்கும்
குடியேறியிருந்து மழை பொழியும் *
கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையே (10)

274 * அரவில் பள்ளி கொண்டு அரவம் துரந்திட்டு *
அரவப் பகையூர்தி அவனுடைய *
குரவிற் கொடிமுல்லைகள் நின்றுறங்கும் *
கோவர்த்தனமென்னும் கொற்றக் குடை மேல் **
திருவிற் பொலி மறை வாணர் புத்தூர்த்
திகழ் * பட்டர் பிரான் சொன்ன மாலை பத்தும் *
பரவு மன நன்குடைப் பத்தருள்ளார் *
பரமான வைகுந்தம் நண்ணுவரே (11)